TAMIL NADU LEGISLATURE
8 MAR 1972
MADRAS

## தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1971 ஜூலை 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 12—7—1971 அன்றைய வினாப் பட்டியலிலிருந்து தள்ளிப்போடப்பட்ட வினா எண். 204 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது.

நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள அணைகள்

*204 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள அணைகளைப் புதுப்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் 'ஆம்' என்று விடையளித்தார்கள். நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள அணைகளைப் புதுப்பிக்கும்போது, எந்த எந்த இடங்களில் உள்ள அணைகளைப் புதுப்பிக்க அரசுக்கு எண்ணம் இருக்கிறது? திருப்பூர் நகரத்திலிருக்கும், பெரியாண்டிப் பாளையத்தின் பக்கத்திலும், வேலாயுதம்பாளையத்தின் பக்கத்திலும் இருக்கும் அணைகளைப் புதுப்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நொய்யலாற்றின் குறுக்கே உள்ள 25 அணைகள் சுமார் 15,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளித்துக் கொண்டுள்ளன. அவற்றில் 12 அணைகளுக்கு மராமத்து வேலைகள் செய்யப்பட்டன. மீதியுள்ள அணைகள் நல்ல நிலையில் உள்ளன.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட அணைக்கட்டுகளும் மராமத்து செய்யப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நொய்யல் ஆற்றில் அணைக்கட்டுகளைப் புதுப்பிக்கும் திட்டம் இருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நொய்யல் ஆற்றில் முழு அளவுக்கு நீர் வந்துகொண்டிருந்த நிலை இப்பொழுது மாறி, நீர் குறைந்திருக்கிறது. அதற்கு என்ன காரணம்? மேலே நீர் தடுக்கப்பட்டுத் திருப்பிவிடப்படுகிறதென்று சொல்லுகிறார்களே, அதுபற்றி அரசு ஏதேனும் ஆராய்ச்சி செய்திருக்கிறதா? நொய்யல் ஆற்றில் வழக்கம்போல் நீர் வரக்கூடிய ஏற்பாடு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 25 அணைகளில் மராமத்து பற்றி நான் முதலில் விடை அளித்தேன். நொய்யல் ஆற்றின் தண்ணீர் மேலே திருப்பிவிடப்படுகிறதா என்பதுபற்றிய விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** நொய்யல் ஆற்றில் பாமத்தி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உங்காம்பாளையம் என்கிற இடத்தில் ஒரு சிறு அணை கட்டி, அங்குள்ள பகுதியில் பாசன வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தினிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நொய்யல் ஆற்றில் இப்பொழுது போதுமான அளவு தண்ணீர் வரவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடைய புகார் ஆகும். தண்ணீரின் அளவு போதுமானதாக இருந்தால் அணை கட்ட ஏற்பாடு செய்யப்படும். இப்பொழுதிருக்கும் குறிப்புகளின்படி, நொய்யல் ஆற்றில் வரும் தண்ணீர் போதாது என்று விவசாயிகள் இப்பொழுது சொல்லி வருகிறார்கள்.

**திரு. என். மருதாசலம் :** நொய்யல் ஆற்றில் பேரூருக்கருகாமையில் சோளந்தரம் மூலையில் ஒரு பாலம் இருக்கிறது. அது வெள்ளப் பெருக்கினால் இடிந்து சேதம் அடைந்திருக்கிறது. அதேபோன்று சண்டைக்காமுத்தூர் வழியில் நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டிய பாலமும் இடிந்து சேதமடைந்திருக்கிறது. அந்த இரண்டு பாலங்களையும் மராமத்து செய்து புதுப்பிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் மூலமாக இந்தப் பிரச்சினை இப்பொழுது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** நொய்யல் ஆற்றின் மேற்பகுதியில் சித்திரைச் சாவடி அணையைத் தூக்கிக் கட்டியதன் காரணமாக, கீழ் மடைப் பகுதிகளில் தண்ணீர் வருவதே கிடையாது. 15 ஆண்டுகளாகத் தண்ணீர் வருவது இல்லை. ஆகவே, கீழ்மடைப் பகுதிக்குத் தண்ணீர் வருவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய விவரக்குறிப்பு இல்லை. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற புகாரை எழுதி அனுப்பினால் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** லோயர் பவானிப் பிராஜெக்டின் கழிவு நீரும் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பாசனத்தின் கழிவு நீரும் நொய்யல் ஆற்றில் வரும் என்று எதிர்பார்க்கப்படுவதால், உங்கம்பாளையம் அணைக்கட்டுத் திட்டத்தை எடுத்துக்கொள்வதுபற்றி அனுதாபத்துடன் கவனிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மூலக் கேள்விக்கு தொடர்புடையதாக இல்லை. ஆகவே, பதில் சொல்ல இயலாமலிருக்கிறேன்.